



வனாந்தரத்தில் ஆசரிப்புக் கூடாரம்





ஆசரிப்புக் கூடாரமும் பிரகாரமும்

# விசேஷித்த ப-களின்
# ஆசாரிப்புக்கூடார நிழல்கள்

**இராஜரீக ஆசாரிய கூட்டத்திற்கு**
**உதவும் ஒரு கரம்**

முதற்பதிப்பு : 2009

**சென்னை வேதமாணவர் சபை**
22, முதல் தெரு, ராஜீவ் நகர்,
காலாடிப்பேட்டை, சென்னை-600 019.

**Tabernacle Shadow**
Tamil version

I Edition 2009 - 1500 copies

**NOT FOR SALE**

Translated by :
**Connoor Bible Students**

Revised by :
**Chennai Bible Students**



# அர்ப்பணிப்பு

**ராஜாதிராஜாவும் கர்த்தாதி கர்த்தாவுமானவருக்கும்**

புத்திர சுவிகாரத்துக்கு காத்துக்கொண்டிருக்கும்
பிரதிஷ்டைக்குட்பட்ட அவருடைய பரிசுத்தவான்கள்

மற்றும்

கர்த்தரை எங்கும் தொழுதுகொள்ளும் விசுவாச வீட்டார்கள்

மற்றும்

தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்கு மிகுந்த ஆவலோடு காத்திருந்து
தவித்து பிரசவவேதனைப் படுகிற சிருஷ்டிகள் ஆகியோரின் நலன்களுக்காக

இந்தப் பணி அர்ப்பணிக்கப்படுகிறது.

❀ ❀ ❀

"தேவனுக்குள்ளே ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம்
இன்னதென்று எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிக்கிறதற்கு," "அந்தக்
கிருபையை அவர் சகல ஞானத்தோடும் புத்தியோடும் எங்களிடத்தில்
பெருகப்பண்ணினார். காலங்கள் நிறைவேறும்போது
விளங்கும் நியமத்தின்படி சகலமும் கிறிஸ்துவுக்
குள்ளே கூட்டப்படவேண்டு மென்று
தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்
முடைய தயவுள்ள சித்தத்
தின் இரகசியத்தை எங்
களுக்கு அறிவித்தார்."
(எபே.3:11, 1:8-10)

❀ ❀ ❀

போதகர் ரசல் அவர்களால் 1881ல் எழுதப்பட்டது.

❀ ❀ ❀

# ஆக்கியோனின் முன்னுரை

இச்சிறு புத்தகத்தின் முதல் பதிப்பானது கி.பி. 1881ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. தேவனுடைய ஆசீர்வாதத்தினாலே, “ராஜரீக ஆசாரிய கூட்ட வகுப்பாருக்காகவே” விசேஷமாக எழுதப்பட்டிருக்கிறதனாலே அவ்வகுப்பாருக்கு இது மிகவும் பயன் உள்ளதாக காணப்படுகிறது. இந்த வகுப்பைச் சார்ந்த அநேகருக்கு முன்பு வெளிப்படுத்தப்படாத பழைய ஏற்பாட்டுக் கால நிழல்களுக்கான பொருளை தேவனின் விரல் தெளிவாக சுட்டிக் காட்டுவதாகவும் இவ்வாறாக தங்களை தாங்களே ப–களாக ஒப்புக் கொடுக்கவும், வேதத்தில் உள்ள “நீங்கள் உங்கள் சரீரங்களை ஜீவ ப–களாக ஒப்புக் கொடுங்கள்,” “கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக மாம்சத்திலே நிறைவேற்றுங்கள்,” “அவரோடே கூடப் பாடுகளை சகித்தோமானால் அவரோடே கூட ஆளுகையும் செய்வோம்,” “நாம் அவருடைய நிந்தையைச் சுமந்து பாளையத்துக்குப் புறம்பே அவரிடத்திற்குப் புறப்பட்டுப் போகக் கடவோம்” போன்ற வார்த்தைகளின் பொருளை முழுமையாக அறிந்து கொள்ளவும் இப்புத்தகம் தங்களை நடத்திச் செல்வதாகவும் இதை வாசிப்போர் ஒப்புக் கொண்டுள்ளனர். மேலும், கிறிஸ்துவின் பாடுகளோடும், வருங்கால மகிமையோடும் பங்குகொள்ளும் தேவனுடையப் பிள்ளைகள் பற்றி வேதம் சொல்லுகிற அநேக காரியங்களைப் பற்றியும் இப்புத்தகம் விளக்குகின்றது.

இதன் ஆசிரியர் சந்தோஷத்தோடே தேவனிடத்தில் ஜெபிப்பது யாதெனில் இதற்கு முந்தைய பதிப்பிலே அவருடைய ஆசீர்வாதம் இருந்ததுப் போல இந்தப் பதிப்பிலேயும் இருந்து, வேதாகம பாடங்களின் தொகுதிகளிலே (Studies in the scripture) இதுவும் ஒரு பாகமாக – ஐந்தாவது தொகுதியின் இணைப்பாக இருந்து பயனுள்ளதாக இருக்க

வேண்டும் என்பதே. வசதிக்காக இது ஒரு தனிப் புத்தகமாக வெளியிடப்படுகிறது. எழுத்துக்களின் அச்சு வடிவங்கள், கூடுதலாக ஒரு அதிகாரம் சேர்ப்பு, சில கருத்துக்களை இன்னும் தெளிவாகக் கூற சொற்றொடர்களில் சில வார்த்தைகள் மாற்றம் போன்ற சில சிறு மாற்றங்கள் தவிர வேறு எந்த வித மாற்றமும் இந்த பதிப்பில் செய்யவில்லை.

இதில் அடங்கியிருக்கும் பாடங்கள் தேவனால் போதிக்கப் பட்டதாகவே தெரிகிறது. யுகங்களைப் பற்றிய தேவ திட்டத்தை தெளிவாக தெரிந்து கொள்ளவேண்டிய கால கட்டத்தில் இது அருளப் பட்டிருக்கின்றது. இப்புத்தகத்தினாலே தேவ ஆசீர்வாதங்கள் பெற்றவர்களும் இதை படிப்பதினாலே பெறப் போகிறவர்களும் தேவனால் போதிக்கப்படுகிறவர்கள் என நாம் நம்புகின்றோம். இவைகள் தேவனுடைய வார்த்தையின் படியே சொல்லப்பட்டிருக்கின்றதேயல்லாமல் எழுதியவரின் ஞானத்தினால் அல்ல. தேவனுடைய வார்த்தையின் மூலமாக, நாம் அறிந்து கொண்டதை தக்க வேத ஆதாரத்துடன் ஒவ்வொருவருக்கும் கேட்கிற யாவருக்கும் இக்காரியங்களை எழுதியிருக்கின்றோம்.

இதிலே சொல்லப்பட்டிருக்கும் நிழல்களின் உண்மைப் பொருளானது, யுகங்களைப் பற்றிய தேவஏற்பாட்டிலே சொல்லப் பட்டிருக்கின்றவைகளோடு ஒத்துப் போகக் கூடியதாக இருக்கிறதை ஆழ்ந்து படிக்கின்ற வேத மாணவர் அறிந்துக் கொள்வர். குறிப்பாக நீதிமானாக்கப்படுதல், பரிசுத்தவானாக்கப்படுதல், திருச்சபை மகிமை அடைதல், பின்பு கடைசியாக மனுக்குலம் முழுவதையும் முந்தின சீருக்குக் கொண்டு வருதல் போன்ற சத்தியங்களோடு ஒத்துப் போவதை காணலாம்.

அருமையான வாசகரே, இதிலே சொல்லப்பட்டிருக்கும் காரியங்கள் உங்களுக்கு உண்மையானதாக இருக்குமானால், நிச்சயமாக அவைகள் உங்களை விழித்தெழப் பண்ணி, உலகப் பிரகாரமான ஆசைகளை ப-யிடச் செய்வதோடு மட்டுமல்லாமல், வேதனையை



அனுபவித்துக் கொண்டிருக்கின்ற இந்த மனுக்குலத்தையும் ஆசீர்வதிக்கத்தக்கதாக, நம்முடைய பிரதான ஆசாரியரோடு ஆசாரியர்களாகும் பரிசைப் பெறுவதற்கு உறுதுணை செய்கிறது. அவ்வாறு நீங்கள் இந்த ஆசீர்வாதத்தை பெறும்போது மற்றவர்களும் அதை பெறும்படிக்கு அவர்களுக்கும் அதை கொடுக்கக் கடவீர்கள். இந்த ஊழியத்தில் நீங்கள் பங்கு பெற விரும்பினால், இந்த புத்தகங்களை குறைந்த விலையில் வாங்கி பயன்படுத்தலாம். தேவனுடைய பந்தியில் ஆகாரம் பெறும் ஒவ்வொருவரும் “தேவனோடு கூட உடன் ஊழியர்கள்” என்ற சிலாக்கியத்தை பெறக் கூடியவர்களாக கருதப்படுகின்றனர்.

கிறிஸ்தவ அன்போடு,

உங்கள் சகோதரனும் கிறிஸ்துவுக்குள்ளான

ஊழியனுமான

**சார்லஸ் டி. ரஸ்ஸல்**